மிக மிக அவசரம் தனிக்கவனம்

முனைவர். வி.சி. இராமேஸ்வரமுருகன்,
பள்ளிக் கல்வி இயக்குநர்.

பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 006.

ந.க. கடித எண் 70536/எப்3/2011 நாள் 06/11/2013

அன்பார்ந்த திரு.

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) – இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துவகை மேலாண்மையின் கீழ் செயல்படும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு புகைப்படம் எடுக்க வேண்டுதல் - அறிவுரைகள் – வழங்குதல் சார்ந்து.

பார்வை:
1. பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) ஆய்வு கூட்டம் நாள் 11.10.2013.
2. சென்னை –6, அனைவருக்கும் கல்வி இயக்கக மாநில திட்ட இயக்குநரின் ந.க.கடித எண் 996/எஸ்.எஸ்.ஏ./ EMIS/photo/2011 நாள் 04.11.2013.

***********

கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் 11.10.2013 அன்று மதிப்புமிகு. பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்துவகை மேலாண்மையின் கீழ் செயல்படும் உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் புகைப்படங்களை கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) யில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் சுய விவரங்களுடன் ஒருங்கிணைப்பது சம்பந்தமாக பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் அவர்களால் கீழ்க்கண்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ✓ பள்ளிக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்துவகை மேலாண்மையின் கீழ் செயல்படும் உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து (வகுப்பு 1 முதல் 12 முடிய) மாணவர்களுக்கும் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளதா என்பது சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- ✓ புகைப்படம் (Photo) எடுக்கப்படாத மாணவர்களுக்கு கீழ்க்கண்ட பொருத்தமான வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றை பின்பற்றி புகைப்படம் எடுக்க சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்/வகுப்பு ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.
- ✓ உயர்தர கைபேசி (High-end mobile phone with 6 or 8 or 10 pixel camera) கொண்டு மாணவர்களை புகைப்படம் எடுப்பது.
- ✓ Web camera வசதி கொண்ட கணினி மூலம் மாணவர்களை புகைப்படம் எடுப்பது.
- ✓ இருபது பேர் அல்லது 10 பேர் கொண்ட அணியாக (Group Photo) நல்ல தரமான புகைப்பட கருவி கொண்டு தரமான புகைப்படமெடுத்து தனித்தனி புகைப்படமாக மாணவர்களின் புகைப்படத்தை பிரித்து எடுப்பது.

- ✓ மேற்படி அனைத்து மாணவர்களுக்கும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளதை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களால் உறுதிபடுத்தப்பட வேண்டும்.
- ✓ மாணவர்களின் புகைப்படங்கள் கல்வித் தகவல் மேலாண்மை முறையில் (EMIS) எளிதாக ஒருங்கிணைப்பு செய்யும் விதமாக குறிப்பிட்ட அளவு (Resolution Size 200x200 ), Capacity (30 kb), தகுந்த படிவம் (Suitable Uploading Format JPEG) மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களால் உறுதி செய்யப்பட வேண்டும்.
- ✓ கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) யில் ஒவ்வொரு மாணவருக்கும் தனிக்குறியீடு எண் (Unique Number) வழங்கப்பட்டுள்ளது. சார்ந்த மாணவர்களின் புகைப்படத்திற்கு தனிக்குறியீட்டு எண்ணை கோப்பு எண்ணாக (File Name) பெயரிடப்பட வேண்டும். இப்பணிக்கு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / வகுப்பு ஆசிரியர்கள் பொறுப்பாவார்கள்.
- ✓ பள்ளி வாரியான மாணவர்களின் புகைப்பட கோப்புகளை அனைத்துவகை மேலாண்மையின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளும் சார்ந்த மாவட்ட கல்வி அலுவலர் வாயிலாக முதன்மைக் கல்வி அலுவலரிடம் குறுந்தகடு வடிவில் வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- ✓ மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும்போது எவ்வித புகாருக்கும் இடமின்றி செய்து முடிக்குமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரைகள் முதன்மைக் கல்வி அலுவலர்களால் வழங்கப்பட வேண்டும்.
- ✓ மேற்கண்ட பணிகளை துரிதமாகவும் நேர்த்தியாகவும் எவ்வித தவறுகளுக்கு இடமளிக்காமலும் செய்து முடிப்பதற்கு ஏற்கனவே அமைக்கப்பட்ட குழுவினை பயன்படுத்திக்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட பணிகளை 15.11.2013க்குள் முடிக்குமாறு சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த,

வி.சி. இராமேஸ்வரமுருகன்

பெறுநர்

சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித்துறை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்:

மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண் 6573/அ1/2013 நாள் 8.11.2013